# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்,

பழைய காவல் ஆணையாளர் அலுவலக வளாகம்,
பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-8.

**இணையதள முகவரி** : www.tnusrb.tn.gov.in

## கூடுதல் தகவல் சிற்றேடு

**அறிவிக்கை எண் : 01/2023 - க்கான கூடுதல் அறிவிக்கை**

## நிலைய அதிகாரிகள், தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறை (ஆண் மற்றும் பெண்) பதவிகளுக்கான நேரடி தேர்வு - 2023.

1. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் 05.05.2023 அன்று காவல் துறையில் காலியாகவுள்ள 615 + 6 (பின்னடைவு காலிப் பணியிடம்) சார்பு ஆய்வாளர்கள் (தாலுகா, ஆயுதப்படை மற்றும் த.சி.கா. படை) பணியிடங்களை நேரடித் தேர்வு - 2023 மூலம் நிரப்புவதற்கான அறிவிக்கை நாளிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. மேற்காணும் அறிவிக்கையைத் தொடர்ந்து, இவ்வாரியம் தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறைக்கு 128+1 (பின்னடைவு காலிப் பணியிடம்) நிலைய அதிகாரிகள் (ஆண் மற்றும் பெண்) பணியிடங்கள் சேர்க்கப்பட்டதற்கான கூடுதல் அறிவிக்கை 23.05.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

2. சார்பு ஆய்வாளர்கள் (தாலுகா, ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை) - 2023-க்கான நேரடி தேர்விற்கு தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகள் நிலைய அதிகாரி, தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறை (ஆண் மற்றும் பெண்) - 2023-க்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைத் தவிர்த்து மற்றவைகள் அனைத்தும் பொருந்தும்.

3. இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது விண்ணப்பதாரர் விருப்பமுடைய பதவிக்கு முன்னுரிமை அடிப்படையில் காவல்துறை அல்லது தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறை எனத் தேர்வு செய்ய வேண்டும். மேலும் விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது துறை முன்னுரிமையை தேர்வு செய்த பிறகு எக்காரணத்தைக் கொண்டும் முன்னுரிமையை மாற்றம் செய்ய இயலாது.

4. காலிப் பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை: 128 + 1* பின்னடைவு காலிப் பணியிடம்

| **பதவியின் பெயர்** | **பணி விதிகள்** | **காலிப் பணியிடங்கள்** | | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| | | **ஆண்கள்** | **பெண்கள்** | |
| நிலைய அதிகாரி | தமிழ்நாடு தீயணைப்பு சார்நிலைப் பணி விதிகள் | 90 | 38 + 1 (பி.கா) | 128 + 1(பி.கா) |

* பின்னடைவு காலிப் பணியிடம் பிற்படுத்தப்பட்ட (இஸ்லாமியர்) பெண் விண்ணப்பதாரருக்கானது.

5. **ஊதிய விகிதம்** : ரூ.36,400 – 1,15,700.

6. **கல்வி மற்றும் இதர தகுதிகள்** :

| | |
|---|---|
| (அ) | காவல் சார்பு ஆய்வாளர் தேர்வு (தாலுகா, ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல்படை) – 2023-ல் பணிக்கு குறிப்பிட்டுள்ள அதே கல்வித் தகுதி நிலைய அலுவலர், தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறைக்கும் பொருந்தும். |
| (ஆ) | அனைத்து தகுதிகளும் சமமாக இருக்கும் பட்சத்தில், நாக்பூரில் உள்ள தேசிய தீயணைப்பு சேவை கல்லூரியில் ஏதேனும் ஒரு பயிற்சி வகுப்பை வெற்றிகரமாக நிறைவு செய்த நபருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். |

**7. ஒதுக்கீடு** :

| ஒதுக்கீடு | மொத்தக் காலிப் பணியிடங்களில் ஒதுக்கீட்டு சதவீதம் | காலிப் பணியிட எண்ணிக்கைகள் | தகுதிகள் |
|---|---|---|---|
| துறை ஒதுக்கீடு | 20% | 26 | தமிழ்நாடு தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறையில் பணிபுரிபவர்கள் அரசாணை நிலை எண்: 234, உள்துறை (காவல்- XVII) நாள்: 13.05.2023-ல் உள்ளபடி தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். |

**குறிப்பு:** நிலைய அதிகாரி பதவித் தேர்வுக்கு விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீடு மற்றும் சார்ந்துள்ள வாரிசுக்கான இடஒதுக்கீடு இல்லை.

**8. திருநங்கைகள்:**

திருநங்கை விண்ணப்பதாரர்கள் நிலைய அதிகாரி பதவி (ஆண் மற்றும் பெண்), தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறை- 2023-ற்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

**9. 20% தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறை சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகள் :**

i. அரசாணை நிலை எண்.234, உள் துறை (காவல்-XVII) நாள்: 13.05.2023-ல் உள்ளபடி தகுதிகளைப் பெற்றிருக்கும் தமிழ்நாடு தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் தீயணைப்போர், முன்னனி தீயணைப்போர், தீயணைப்போர் ஓட்டி, எந்திர கம்மியர் ஓட்டி ஆகியோர் 20% துறை ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்.

  a) இவ்விண்ணப்பதாரர்கள், அறிவிக்கைத் தேதி அன்று 5 வருடங்கள் பணி நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.
  b) விண்ணப்பதாரர்கள் சிறு தண்டனையான கண்டனம் (Censure) தவிர பிற தண்டனைகளை அவர்களுடைய பணிக் காலம் முழுவதிலும் பெற்றிருக்கக் கூடாது.
  c) அனைத்து தகுதிகளும் சமமாக இருப்பின், நாக்பூரில் உள்ள தேசிய தீயணைப்பு சேவை கல்லூரியில் ஏதேனும் ஒரு பயிற்சி வகுப்பை வெற்றிகரமாக நிறைவு செய்த நபருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
  d) துறைக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தங்கள் பிரிவு (Unit) / அலுவலக தலைவர் / தகுந்த அதிகாரியிடமிருந்து பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் தடையில்லாச் சான்று (NOC) பெற்று இணைய வழி விண்ணப்பத்துடன் பதிவேற்றம் செய்ய வேண்டும் (மாதிரிப் படிவம் பிற்சேர்க்கை - VII-A -ல் கொடுக்கப்பட்டுள்ளது).

ii. துறை விண்ணப்பதாரர்களுக்கு முதன்மை எழுத்துத் தேர்வு தனியாக நடத்தப்படும். துறை விண்ணப்பதாரர் பொது மற்றும் துறை ஒதுக்கீட்டிற்கான தகுதிகளை பெற்றிருப்பின் இரண்டிற்கும் சேர்த்து விண்ணப்பிக்கலாம்.

iii. துறை ஒதுக்கீட்டுக்கு தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் அக்காலிப் பணியிடங்களை அதே வகுப்பைச் சார்ந்த தகுதியான பொது விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

iv. துறை ஒதுக்கீட்டில் நடைமுறையிலுள்ள விதிகளின்படி வகுப்புவாரி ஒதுக்கீடு பின்பற்றப்படும்.

**10. 20% தீயணைப்பு & மீட்புப் பணிகள் துறை விண்ணப்பதாரர்களுக்கான தேர்வு நிலைகள் :**

**எழுத்துத் தேர்வு**

**பகுதி – I. தமிழ் மொழி தகுதித் தேர்வு :**

தமிழ் மொழித் தகுதித் தேர்வு துறை மற்றும் பொது விண்ணப்பதாரர்களுக்கு ஒரே தேர்வாக நடத்தப்படும்.

**பகுதி – II. 20% துறை விண்ணப்பதாரர்களுக்கான முதன்மை எழுத்துத் தேர்வு :**

முதன்மை எழுத்துத் தேர்வானது இரு பகுதிகளைக் கொண்டது. பகுதி (A): பொது அறிவு மற்றும் பகுதி (B): உளவியல் தேர்வு (Psychology Test): தகவல் தொடர்புத் திறன்கள் (Communication Skills), எண் பகுப்பாய்வு (Numerical Analysis), மனத் திறன் (Mental Ability), தருக்க பகுப்பாய்வு (Logical Analysis) மற்றும் தகவல்களை கையாளும் திறன் (Information Handling Ability). தீயணைப்பு & மீட்புப் பணி தொடர்புடைய விதிகள் மற்றும் நடை முறைகள், நிலைய நடைமுறை தமிழ்நாடு தீயணைப்பு துறை நடைமுறை நூல் மற்றும் தீயணைப்பு மீட்புப் பணித் துறை நிர்வாகம் ஆகியவற்றை உள்ளடக்கியது. எழுத்துத் தேர்வின் மொத்த மதிப்பெண்கள் 85.

**11. துறை விண்ணப்பதாரர்களுக்கான சிறப்பு மதிப்பெண்கள்:**

| பணிக்காலத்தில் பெற்ற பதக்கங்கள் (அதிகபட்சம் 5 மதிப்பெண்கள்) | |
|---|---|
| குடியரசுத் தலைவரின் தீயணைப்பு பணிக்கான வீரதீரப் பதக்கம் (குடியரசு தினம் / சுதந்திர தினம்)<br>(அல்லது)<br>தீயணைப்பு பணிக்கான வீரதீரப் பதக்கம் (குடியரசு தினம் / சுதந்திர தினம்)<br>(அல்லது)<br>தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்பு பணிக்கான வீரதீரப் பதக்கம் (அண்ணா பதக்கம்). | 5 மதிப்பெண்கள் |
| தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்பு பணிக்கான சிறப்பு பணிப் பதக்கம்<br>(அல்லது)<br>தமிழ்நாடு முதலமைச்சரின் அண்ணா வீரதீரப் பதக்கம் (குடியரசு தினம்) | 3 மதிப்பெண்கள் |
| மெச்சத்தக்கப் பணிக்கான தீயணைப்பு பணிப் பதக்கம் (குடியரசு தினம் / சுதந்திர தினம்)<br>(அல்லது)<br>தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்பு பணிப் பதக்கம் (அண்ணா பதக்கம்). | 2 மதிப்பெண்கள் |
| தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்பு பணிப் பதக்கம் (பொங்கல் நாள்) | 1 மதிப்பெண் |

**12. தற்காலிகத் தேர்வுப் பட்டியல்** :

நிலைய அதிகாரி, தீயணைப்பு & மீட்புப் பணிகள் (ஆண் மற்றும் பெண்) -2023க்கான தற்காலிகத் தேர்வுப் பட்டியல் இவ்வாரியத்தால் தனியாக வெளியிடப்படும்.

**13. மருத்துவப் பரிசோதனை மற்றும் குணநலன்கள் மற்றும் முந்தைய பழக்கவழக்கங்களை சரிபார்த்தல்:**

தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் **பிற்சேர்கை-X-A**-ன்படி மருத்துவப் பரிசோதனை, குணநலன்கள் மற்றும் முந்தைய பழக்கவழக்கங்கள் குறித்து விசாரித்து சரிபார்க்கப்படும்.

**14. பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய சான்றிதழ்கள்/ ஆவணங்கள்** :

விண்ணப்பதாரர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள சான்றிதழ்கள் / ஆவணங்களை சார்பு ஆய்வாளர் (தாலுகா, ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை) -2023 தகவல் சிற்றேட்டில் குறிப்பிட்டுள்ளவைகளை தவிர, கூடுதலாக பதிவேற்றம் செய்ய வேண்டும்.

i. தீயணைப்பு & மீட்புப் பணித் துறையில் பணியின் பொழுது பதக்கம் பெற்றதற்கான சான்றிதழ்.
ii. துறை விண்ணப்பதாரர்களுக்கான பரிந்துரைக்கப்பட்ட தடையில்லா சான்றிதழ்.

**15. சான்றிதழ் மாதிரி படிவ விவரம்** :

i. துறை விண்ணப்பதாரர்களுக்கான தடையில்லாச் சான்றிதழ் மாதிரி படிவம், **பிற்சேர்க்கை - VII -A**-ல் உள்ளது.

**16. விண்ணப்பதாரர்களுக்கான பொது அறிவுரைகள்** :

விண்ணப்பதாரர்கள் இணைய வழி விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் அனைத்தும் தங்களுடைய அறிவு மற்றும் நம்பிக்கைக்கு உண்மையானதாகவும், சரியானதாகவும் மற்றும் முழுமையானதாகவும் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் அளித்துள்ள தகவல்கள் தேர்வுக்கு முன்னர் அல்லது பின்னர் போலியானது, தவறானது அல்லது முழுமையற்றது, தகுதியற்றது என்று கண்டறியப்பட்டால், எந்த நிலையில் கலந்து கொண்டிருப்பினும் விண்ணப்பதாரரின் தேர்வு நிலை உறுதியாக நிராகரிக்கப்படும்.

உறுப்பினர் செயலாளர்,
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்.
சென்னை-08.

**பிற்சேர்க்கை -VII-A**

**NO OBJECTION CERTIFICATE FOR APPLYING UNDER 20% DEPARTMENTAL QUOTA FOR THE RECRUITMENT OF STATION OFFICER, FIRE & RESCUE SERVICES DEPARTMENT**

Rc. No.__________, Date:______

Office of the District Officer /
Deputy Director / Joint Director,
Fire & Rescue Services.

| | | | |
|---|---|---|---|
| 1. | Name of the Fire & Rescue Services Personnel applying under departmental quota | : | |
| 2. | Present Rank and Number | : | |
| 3. | Present place of work | : | |
| 4. | Date of Birth | : | |
| 5. | Date of Enlistment | : | |
| 6. | Date of completion of 5 years of service | : | |
| 7. | Educational Qualification | : | |
| 8. | DETAILS OF MINOR PUNISHMENTS AWARDED :<br><br>**Note:**<br>a) If no minor punishment is awarded, **"NIL"** should be noted in the box and in any way it should not be left **"BLANK".**<br>b) Details of minor punishments awarded such as censure should be furnished, if any. | : | |

I hereby certify that, Thiru. -----------------------------, working as ------------------, is eligible to apply under 20% departmental quota.

OFFICE SEAL

Signature of the Officer:

Name:

Designation:

Date:

**ANNEXURE X-A**

**MEDICAL EXAMINATION REPORT FOR FIRE & RESCUE SERVICES DEPARTMENT**

(Referred to in rule 5A)

Certificate of Physical Fitness

We the undersigned, do hereby certify that we have medically examined Thiru………………. son of Thiru…………………. (Sl.No…………./District Code No. ) a candidate for employment under the Government of Tamil Nadu as a Station Officer in the Tamil Nadu Fire Subordinate Service.

(2) His age, according to his own statement is ………… years and by appearance about …………… years. His weight is about…….. Kgs. His chest measurement is about……….. Cms. on full inspiration and …… Cms. on full expiration. His personal identification marks are noted below.

(i)…………………………….

(ii)……………………………

(3) The certificate of his medical examination is as below:-

(i) Any deformity in body, hands, fingers, legs, ankles or lameness etc.

(ii) Whether the candidate has 'Knock Knees' 'Bow legs' 'Flat Foot' or 'Varicose veins'.

(iii) Speech; Any defect noticed; whether stammers.

(iv) Eyes-

(a) Any Squint;

(b) Any morbid condition of the eyes or lids of either eye;

(c) Whether each eye has a full field of vision:

(d) Colour blindness :

(e) Night blindness :

| | | Right eye | Left eye |
|---|---|---|---|
| (f) Distant Vision | : | …………. | ………… |
| (g) Near vision | : | …………. | ………… |

(h) Any other observations :

(v) Ears-

(a) Any running ears etc. :

(b) Hearing: Right ear :

(c) Hearing: Left ear :

(vi) Urine:-
(Chemical Examination and Albumen) :

(vii) Sugar / Diabetes :

(viii) Heart Disease :

(ix) Lungs :

(x) Shortness of breath :

(xi) Asthma, Chronic cough; etc. :

(xii) Tuberculosis :

(xiii) Screening of chest for Lesions :

(xiv) Radiography to detect early tuberculosis. :

(xv) Stomach :

(xvi) Liver and Intestinal trouble :

(xvii) Appendicitis :

(xviii) Gall Bladder trouble :

(xix) Kidney disease :

(xx) Gall stones Jaundice :

(xxi) Venereal diseases :

(xxii) Insanity / Epilepsy :

(xxiii) Diptheria, Mumps, Rheumatic fever, etc. :

(xxiv) AIDS / HIV :

(xxv) Tumor/Cyst/Cancer :

(xxvi) Any other disease or other observations. :

(4) In view of the medical examinations conducted, as above, it is certified as below (delete whichever is not applicable):

(i) The candidate is of sound health and is free from any bodily defect, infirmity or incurable disease rendering him unfit for service as a Station Officer in the Fire Service Department. His general condition is such as to enable him perform efficiently the active duties of the said post.

(ii) The candidate is suffering from the following physical defects, infirmities or incurable diseases etc., which make him liable to be rejected on medical grounds:-

…………………………………..
…………………………………..

(iii) The candidate is free from any permanent infirmity or incurable disease, but is suffering from the following infirmity/curable disease which can possibly be treated and cured within three months. Hence, he shall reappear before this board for a second medical opinion at the end of the third month or earlier:

…………………………………..
…………………………………..

| **MEMBER** | **MEMBER** | **CHAIRMAN** |
|---|---|---|
| (to be signed) | (to be signed) | (to be signed) |
| Designation | Designation | Designation |

Place:

Date:

(Note – Directions for using the 'Test Dot Card')

(1) Place the recruit with his back to the light and hold the test card perfectly upright in front of him at a measured distance of exactly 100 feet. The light should fall fully on the card.

(2) Examine each eye separately. The eye not under trial should be shaded by the hand of an Assistant who will take care not to press on the eye bal

(3) Expose some of the 'dots' not more than seven or eight at a time and desire the recruit make their number and position. Vary the groups frequently to provide against deception.